# சொற்பொருள் அகராதி:

**தேவதூஷணம்,** (*blasphemia*) - "Blasphemy" *என்பதன் அடிப்படைப் பொருள் "புண்படுத்தும் பேச்சு" என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை பெரும்பாலும், தேவன், கிறிஸ்து அல்லது பரிசுத்த ஆவியானவர் ஆகியோரை கனவீனப் படுத்தும் வார்த்தைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது. "தெய்வீக விஷயங்களைப் பற்றி இறுமாப்புடன்* [*மிதமாக, அரைகுறை எண்ணத்துடன்*] *பேசுவது" என்பதே இதற்கான நடைமுறை விளக்கமாகும். இயேசு, தாம் தேவனுடைய குமாரன் என்று கூறியபோது, விசுவாசமற்ற யூதர்களால் அக்கூற்று தேவதூஷணம் என்று கருதப்பட்டது (யோவா. 10:33; மத். 26:65). நியாயப்பிரமாணத்தின்படி தேவதூஷணம் மரணத்துக்கேதுவான குற்றமாயிருந்தது.*

**உதவிக்காரர்,** (*diakonos*) - "Deacon" *என்ற வார்த்தையின் அடிப்படைப் பொருள் "பணியாளர்" அல்லது "ஊழியர்" என்பதாகும். இவ்வார்த்தையின் பெயர்ச் சொல் மற்றும் வினைச் சொல் வடிவங்கள் ஊழியம் செய்யும் எவரையும் குறிப்பதற்குப் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன: மார்த்தாள் (லூக். 10:40), மாற். (2 தீமோ. 4:11), தூதர்கள் (எபி. 1:14) மற்றும் பிரசங்கியார்கள் (2 தீமோ. 4:5). சில வேளைகளில், சபையில் "ஒரு உதவிக்காரர்" என்ற நியமனத்தைக் குறிப்பிட்ட பணிக்காகப் பெற்றவரைக் குறிக்க விசேஷித்த வகையில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இந்தப் பொறுப்பிற்கான தகுதிகள் 1 தீமோ. 3:8-13ல் தரப்பட்டுள்ளன. இப்பணிப் பொறுப்பின் பெயர் சுட்டிக்காட்டுவதன்படி, உதவிக்காரரின் பணி ஊழியம் செய்வதுதானே தவிர, தலைமையேற்று நடத்துவதல்ல. புதிய ஏற்பாட்டில், மூப்பர்கள் சபையைக் கண்காணிப்பு செய்யவும், உதவிக்காரர்கள் மூப்பர்களின் கீழ் பணியாற்றவும் நியமனம் பெற்றனர் (பின்வரும் இதழொன்றில்* "Elders", *மூப்பர்கள் என்ற வார்த்தையின் கீழ்க் காணவும்).*

***சீஷன்***, (*mathetes*) - “Disciple” *“சீஷன்” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் அடிப்படைப் பொருள் “கற்பவர்” என்பதாகும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், மாணவர் தமது ஆசிரியரின் போதனையைக் கேட்பதற்கு அவர் செல்லும் இடங்கள் யாவற்றுக்கும் அவரைத் தொடர்ந்து பின்பற்றிச் சென்றதால், இவ்வார்த்தையானது, ‘‘பின்பற்றுபவர்’’ அல்லது ‘‘போலச் செய்பவர்’’ என்ற கருத்தையும் கொண்டுள்ளது.*

***தேவபயமுள்ளவர்***, (God-fearer) - *புதிய ஏற்பாட்டில் இச்சொற்றொடர் சில சமயங்களில் யூதர்களையும், சில சமயங்களில் கிறிஸ்தவர்களையும் குறிக்கின்றது. நடபடிகள் நூலில் இச்சொல் பெரும்பாலும் ஒரு சிறப்பான பொருளி லேயே பயன்படுத்தப்படுகிறது: உண்மையான தேவனை விசுவாசித்து ஜெப ஆலய ஆராதனைக்கு வரும் புறஜாதியார் ‘‘தேவபயமுள்ளவர்’’ எனப்பட்டார், ஆனாலும் இவர் யூதமார்க்கத்தமைந்தவராயிருந்ததில்லை (நடபடிகள் 1 இதழில்* “Proselyte”, *யூதமார்க்கத்தமைந்தவர் என்ற சொல்லின் கீழ்க் காணவும்).*

***சமாரியர்கள்***, (*Samaritans*) - *அசீரியப் படையெடுப்பின் விளைவாக சமாரிய இனம் உண்டாயிற்று. கி.மு. 722ல், வடக்குக் கானானில் இருந்து ஆயிரக்கணக்கான யூதர்களை, அசீரியர்கள் சிறைப்பிடித்துச் சென்றனர் - ஆனால் சிலர் தங்கள் நாட்டிலேயே இருந்து விட்டனர். அசீரியாவின் அரசன் பாபிலோன், ஆமாத் மற்றும் அரபியாவிலிருந்து குடியேற்ற மக்களை நாட்டில் மறுபடியும் மக்களால் நிறைப்பதற்காக அனுப்பி வைத்தார் (2 இரா. 17:24-26; எஸ்றா 4:2), இக்குடி யேற்ற மக்கள் யூதர்களுடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். இதன் விளைவாக உண்டான இனத்தார் சமாரியர் என்று அழைக்கப்பட்டனர் - பகுதி யூதரும், பகுதி புறஜாதியாருமானவர்கள். பாபிலோனியர்களால் சிறைப் பிடிக்கப்பட்டிருந்த யூதர்கள் கி.மு. 538ல் பலஸ்தீனத்திற்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் தங்கள் இனத் தூய்மையைக் காத்திருந்ததால், சமாரியர்களைத் தாழ்வான கண்ணோட்டத் துடன் நோக்கினர். மறுகட்டுமானத்தில் சமாரியர்கள் உதவியாயிருக்க முன் வந்தனர், ஆனால் யூதர்கள் அவ்வுதவியை ஏற்க மறுத்து விட்டனர். பிறகு, சமாரியர்கள் கெரீசிம் மலைமீது*

தங்களுக்கென்று ஆராதிக்கும் இடத்தை ஏற்படுத்திக் கொண்டனர் (யோவா. 4:20). பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களை மட்டுமே தங்களுக்கு வேத வசனங்களாக சமாரியர்கள் ஏற்றுக்கொண்டனர் - இவைகளில் எருசலேம் ஆராதனைக்குரிய இடம் என்று குறிப்பிடப்படவில்லை.

**வேதபாரகர்,** (*grammateus*) - "Scribe" "வேதபாரகர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல்லின் அடிப் படைப்பொருள் "எழுதுபவர்" என்பதாகும். பழைய ஏற்பாட் டில், "வேதபாரகர்" என்ற வார்த்தையானது முக்கியமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் (இராஜாக்களின் வார்த்தைகள் உட்பட முக்கியமானவைகளைப் பதிவு செய்யும்) பொறுப் புள்ள தனிநபர்களைக் குறித்தது. புதிய ஏற்பாட்டில், மார்க்கத் தலைவர்களின் ஒரு குழுவைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (யூத பாரம்பரியத்தின்படி இது எஸ்றாவால் தொடங்கப்பட்டது [எஸ்றா 7:6]). பழைய ஏற்பாட்டின் வேதவசனங்களைப் பிரதியெடுப்பது வேதபாரகர் களின் முக்கியப்பணிகளில் ஒன்றாக இருந்ததால், இவர்கள் நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்கள் என்று கருதப்பட்டனர். வேதபாரகர்களில் அநேகர் பரிசேயர்களாயிருந்தனர் (நட படிகள் 1 இதழில் "Pharisees", பரிசேயர்கள் என்ற வார்த்தையின் கீழ்க் காணவும்).

**ஜெப ஆலயம்**, (*sunagoge*) - "Synagogue" என்ற வார்த்தையானது, "with" (*sun*) என்ற முன்னிடைச் சொல்லுடன் "to lead" (*ago*) என்ற சொல் இணைந்த ஒரு கூட்டு வார்த்தை ஆகும். இதன் அடிப்படைப் பொருள் "இணைந்து வழிநடத்து பவர்கள்" என்பதாகும். இதன் அடிப்படைப் பொருளில் இது *ekklesia* என்பதற்கு ஒத்ததாக உள்ளது (நடபடிகள் 1 இதழில் "Church", சபை என்ற வார்த்தையின் கீழ் காணவும்), மற்றும் இது கிறிஸ்தவர்களின் கூட்டத்தைக் குறிக்கவும் ஒருமுறை பயன் படுத்தப்பட்டுள்ளது (யாக். 2:2ல் "ஆலயத்தில்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை Sunagoge என்பதாகும்). புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை யூதர்கள் ஆராதிக்கும் இடத்தை மற்றும்/அல்லது ஆராதிப்பதற்காகக் கூடும் யூதர்களையே வழக்கமாகக் குறித்தது. பாரம்பரியத்தின்படி, பாபிலோனியச் சிறைப்பிடிப்பின் போது யூதர்கள் ஆராதிப்பதற்காக தேவாலயத்திற்குச் செல்ல முடியாமல்

*இருந்ததால் ஜெப ஆலயங்கள் தோன்றின எனப்படுகின்றது. யூதர்கள் இந்த ஜெபஆலயங்களை, தேவாலயத்தைப் போல அவ்வளவு பரிசுத்தமானதாக எண்ணவில்லை, மற்றும் ஜெபஆலய ஆராதனையானது தேவாலய ஆராதனையோடு ஒப்பிடுகையில் முறைசாராததாகவே கருதப்பட்டது (லூக். 6 மற்றும் அப். 13 ஆகிய அதிகாரங்களில் ஜெப ஆலய ஆராதனை பற்றிய ஒரு சுருக்கமான விளக்கம் தரப்படுகின்றது). ஜெப ஆலயத் தலைவர்கள் ''மூப்பர்கள்'' என்று பொதுவாக அழைக்கப் பட்டனர். ஆராதனை ஊழியங்களுக்கும், யூதச் சிறுவர் களுக்குப் போதிப்பதற்கும் இந்த ஜெப ஆலயக் கட்டிடங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரு ஜெப ஆலயத்தைத் தொடங்கு வதற்கு, பத்து யூதர்கள் (ஜெப ஆலயப் பணிகளுக்குத் தங்கள் நேரத்தை ஒப்புக் கொடுப்பவர்கள்) தேவைப்பட்டனர்.*

***பரிசுத்தவான்,*** saint (*hagios*) - *"பரிசுத்தவான்" என்பது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்கு மிகவும் பொதுவாகப் பயன்படும் ஒரு சொற்றொடர் ஆகும் (அப். 9:13, 32, 41; 26:10). ஒரு நபரை இது குறிக்கையில், "பரிசுத்தவான்" என்றும் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது பாவமே இல்லாத பரிபூரணத்தைக் குறிப்பதாயிருப்பதில்லை (கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் பரிபூரணத்துவத் திலிருந்து வெகு தொலைவில் இருந்தார்கள். ஆனாலும் அவர்கள் "பரிசுத்தவான்களாகவே" இருந்தார்கள் [1 கொரி. 1:2; 2 கொரி. 1:1]). இந்தக் கிரேக்க வார்த்தையின் நேரடியான அர்த்தம், ''பிரித்தெடுக்கப்பட்ட(அல்லது ஒதுக்கி வைக்கப் பட்ட)வர்" என்பதாகும். இது "பரிசுத்தமான" அல்லது "பரிசுத்த மாக்கப்பட்ட" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். ஒரு வகையில், நாம் கிறிஸ்தவர்களானபோது தேவனால் பரிசுத்த மாக்கப்பட்டு, அவரது ஊழியத்திற்கென்று ஒதுக்கி வைக்கப் படுகின்றோம் (2 தெச. 1:9; விசுவாசிகள் ''பரிசுத்தவான் களென்று" அழைக்கப்படுகின்றனர்). இன்னொரு வகையில், பரிசுத்தமாக்குதல் என்பது தொடர்ந்து நடைபெறும் செயல் முறையாகும் (1 தெச. 5:23). நாம் நம்மை அழைத்த "பரிசுத்த அழைப்புக்கு" ஏற்ற வாழ்க்கையை வாழத் தொடர்ந்து முயற்சி செய்கின்றோம் (2 தீமோ. 1:9).*

# மேலும் படிப்பதற்கான ஒரு வழிகாட்டி

# கொர்நேலியுவின் நிகழ்ச்சியில் கேள்விகள்

**கேள்வி:** *கொர்நேலியுவின் நிகழ்ச்சியானது, கிறிஸ்தவர்கள் இராணுவத்தில் பணி புரிவதைப் பற்றி என்ன கூறுகின்றது?*

**பதில்:** *ஏதேனும் இருந்தாலும் மிகக் கொஞ்சமே கூறுகின்றது. கொர்நேலியு ஒரு இராணுவ வீரனாக இருந்தார் என்பதாலும் - அவர் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அதில் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டார் என்று சுட்டிக்காட்டப்பட வில்லை என்பதாலும் - சிலர், இந்நிகழ்ச்சியானது கிறிஸ்தவர்கள் இராணுவத்தில் பணிபுரிய முடியும் என்பதை நிரூபிக்கின்றதற் காக இவ்வுண்மையைப் பயன்படுத்துகின்றார்கள். மற்றவர்கள், அமைதி நிலையில் இருந்து மேற்கொள்ளும் விவாதம் பலமான விவாதமல்ல என்ற ஆலோசனையை முன் வைக்கின்றார்கள். J.W. மெக்கார்வி அவர்கள், ''இது போர் வீரர் ஒருவர் கிறிஸ்தவரான நிகழ்ச்சியே தவிர, கிறிஸ்தவர் ஒருவர் போர் வீரரான நிகழ்ச்சியல்ல. இது முந்தியதற்கான உதாரணத்தைத் தருகின்றதே தவிர, பிந்தியதற்கான உதாரணத்தைத் தருவ தில்லை''[1] என்று குறிப்பிட்டார். என்னால் நினைவு படுத்த முடிந்த அளவு கடந்த காலத்தில், கிறிஸ்தவர்கள் இராணுவத்தில் பணிபுரியலாமா? கூடாதா? என்பது பற்றி சபை உறுப்பினர்கள் நிச்சயமற்றவர்களாகவே இருந்திருக்கின்றார்கள்; ஆனால் நான் அறிந்த வரையிலும் இந்தப் பிரச்சனையானது எந்தக் காலத்திலும், எந்த உள்ளூர் சபையையும் பிரித்து வைத்த தில்லை. இது வேதவசனத்தில் தெளிவாய் விளக்கமளிக்கப் படாத ஒரு கருத்தாயிருப்பதால், ரோமர் 14ல் ஆளப்படும் கொள்கையின்படி, கருத்தின் மீதே முடிவெடுக்க வேண்டிய விஷயமாயிருக்கின்றது: "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன்" (வ. 5), மற்றும் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் தம்முடன் ஒத்துப் போகாத வர் மீது சகிப்புத் தன்மையும் காண்பிக்கக் கடவர்கள்.*

**கேள்வி:** *அப்போஸ்தலர்கள் பெற்றது போன்ற ''அதே வரத்தை'' கொர்நேலியுவும் அவரது நண்பர்களும் பெற்றுக்*

*கொண்டதால், அவர்கள் ஒரே மாதிரியான வல்லமையைக் கொண்டிருந்தார்களா? அப். 9ல் பேதுரு மரித்தோரை உயிர்ப்பித்தது போல அவர்களும் செய்ய முடிந்ததா? அப்போஸ்தலர்களைப் போல அவர்களும் மற்றவர்களின் மேல் கைகளை வைத்து அற்புத வல்லமைகளைக் கொடுக்க முடிந்ததா (அப். 8:18)?*

***பதில்:*** *லூக்கா ஒன்றும் கூறவில்லை. கொர்நேலியு மற்றும் அவரது நண்பர்கள் பற்றிய தொடர் வரலாற்றை அதிகமாய் அறிய நாம் விரும்புகின்றோம், ஆனால் நாம் அதை அறிவது தேவை என்று பரிசுத்த ஆவியானவர் நினைக்கவில்லை. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதால் மட்டுமல்ல, அவர்கள் அப்போஸ்தலர்கள் என்பதற்காகவே அநேக வல்லமைகளை உடையவர்களா யிருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. நிகழ்ந்தது இவ்விதமா யிருந்தால், கொர்நேலியுவும் வீட்டாரும் அதே விதமான வல்லமைகள் பெற்றிராதிருக்கலாம். உறுதியாகவே கொர்நேலி யுவும் அவரது வீட்டாரும் சில அற்புத வல்லமைகளைப் பெற்றிருந்தார்கள். மற்ற வரங்களுடன், அவர்களில் ஒருவரோ அல்லது பலரோ, பேதுரு அங்கிருந்து சென்ற பிறகு தேவனு டைய சித்தத்தை அறியவும், சபையாராக அவர்களை வழி நடத்தவும் தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருப்பார்கள்.*

***கேள்வி:*** *கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் பெற்ற ஞானஸ்நானமானது, "குழந்தை ஞானஸ்நானம்" வேதவசனத் தின்படியானது என்று நிரூபிக்கின்றதா?*

***பதில்:*** *இல்லை. கொர்நேலியுவின் வீட்டில் சிறு குழந்தைகள் இருந்திருப்பார்கள் என்றும், அவர்களும் ஞானஸ்நானப்படுத்தப்பட்டிருப்பார்கள் என்றும் சிலர் யூகிக்கின்றார்கள். ஆயினும் கொர்நேலியுவின் வீட்டில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் முதலாவது, வசனத்தைக் கேட்டார்கள் (10:33; 15:7) இயேசுவை விசுவாசித்தார்கள் (10:43; 15:7, 9), மற்றும் பிறகு மனந்திரும்பினார்கள் (11:18). குழந்தைகள் இவைகளைச் செய்ய முடியாது.*

# பிசாசுகள்: இயற்கைக்கு அப்பாற்பட்ட துன்மார்க்க சக்திகள்

*இயேசு தமது சொந்த ஊழியத்தைத் தொடங்கிய போது, நாடெங்கும் அவர் பயணம் செய்து, ''பிரசங்கம் பண்ணிக் கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்'' (மாற். 1:39). பன்னிருவருக்கு அளவான கட்டளைகளைக் கொடுத்தனுப்புகையில் அவர், "சகல பிசாசுகளையும் துரத்த அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்" (லூக். 9:1). அவர் பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்று முன்னர், அப்போஸ்தலர்கள் ''பிசாசுகளைத் துரத்தும்'' வரத்தைப் பெறுவார்கள் என்று வாக்குத்தத்தம் செய்தார் (மாற். 16:17). அப்போஸ்தலர்கள் அசுத்த ஆவிகளைத் துரத்திய பல விபரங் களை நாம் நடபடிகள் நூலில் காண்கின்றோம் (அப். 5:16; 8:7; 16:16-18; 19:11, 12).*

*விடுதலைக் கல்வியாளர்கள் என்பவர்கள், சரீரத்தின் வியாதிகள் யாவும், அசுத்த ஆவிகளால் உண்டாவதாக மூட நம்பிக்கையுள்ள மக்களால் கூறப்பட்டது என்று கூறி உண்மை யிலேயே பிசாசு பிடிப்பதை மறுக்கின்றனர். ஆயினும் ஏவப் பட்ட மருத்துவரான லூக்கா, சரீர வியாதிகளுக்கும், "அசுத்த ஆவிகளினால் அல்லது பிசாசுகளினால் உபத்திரவப்பட்ட நிலைக்கும்" இருந்த வேறுபாட்டைக் குறிப்பாகத் தெரிவித்தார்.*

"Demon" - *பிசாசு என்ற வார்த்தை* daimonion *என்ற கிரேக்க வார்த்தையின் ஒலி பெயர்ப்பாகும்.* (KJV*யில்* daimonion *என்பதன் பன்மைச் சொல்லாக* "devils" *என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. ஆனால் பேய்* [diabolos] *என்பவன் ஒருவனே யாதலால் இது குழப்ப மூட்டுவதாக உள்ளது). பிசாசுகள் "அசுத்த ஆவிகள்" என்றும் "தீய ஆவிகள்" என்றும் அழைக்கப் படுகின்றன. வேதாகமத்தில் பிசாசுகளைப் பற்றி குறைந்த அளவே செய்தியுள்ளது, ஆனால் யூகத்திற்குப் பஞ்சமில்லை (இவைகளில் அதிகமானவை அந்நிய தெய்வ மூட நம்பிக்கை யின் அடிப்படையில் வந்தவையாகும்). சிலர், மரணமடைந்த*

*தீயவர்களின் ஆவிகளே பிசாசுகள் என்று எண்ணுகின்றனர் (லூக். 16ல் மரணமடைந்திருந்த ஐசுவரியவான் இந்தப் பூமியில் உள்ள ஒருவருடனும் தொடர்பு கொள்ள முடியாமலிருந்தது என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இது ஏற்புடைய தல்ல). மற்றவர்கள், இந்த ஆவிகள் சாத்தானைப் பின்பற்றி முரட்டாட்டத்தில் இறங்கிய விழுந்து போன தூதர்கள் என்று எண்ணுகின்றனர். இவைகள் உள்ளன என்பதையும், இவைகள் சாத்தானுடன் (பேயுடன்) சேர்ந்து அவனுக்காகவே வேலை செய்கின்றன என்பதையும் மட்டும் நாம் அறிவது போதுமானது என்று தேவன் எண்ணினார்.*

*மத். 12:22-29ல், சாத்தான் என்பவன் "பிசாசுகளின் அதிகாரி" என்று குறிப்பிடப்பட்டான். சாத்தானுடன் இணைந்து வேலை செய்யும் இந்தப் பிசாசுகள் மனிதர்களைப் பாழாக்க முயற்சி செய்கின்றன. இவ்விதமாக விக்கிரகாராதனை என்பது பேய்களுக்கு வழிபாடு செலுத்துவதென்று அழைக்கப்படுகிறது (1 கொரி. 10:20; வெளி. 9:20), மற்றும் தவறான உபதேசமும் பிசாசுகளின் உபதேசம் என்று அழைக்கப்படுகிறது (1 தீமோ. 4:1). பிசாசுகள் ஆவிக்குரிய வகையில் முக்கியமான எதிரிகள் என்று பவுல் விளக்குகின்றார்: "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங் களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோ டும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே. 6:12). இந்தப் பிசாசுகள் யாவும் பேயுடனும், இவைகளைப் பின் பற்றிய யாவருடனும் நரகத்தில் எறிந்து விடப்படுவார்கள் (வெளி. 20:10, 15).*

*பிசாசு பிடித்தல் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிசாசுகள் தனிநபரை அவரது விருப்பத்திற்கு மாறாக ஆட்டிப் படைத்தல்) என்பது கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் காலம் வரைக்கும் மட்டும் இருந்த ஒரு கோட்பாடாகும். காலங்கள் தோறும், வேதவசனங்களின் மூலமாக தேவனுடைய வல்லமை விசேஷமாகப் பொழியப்படும் நிகழ்ச்சிகள் என்று அழைக்கப்படுபவைகள் எழுந்தன: உலகத்தையும் மனித னையும் படைத்தல், ஒரு விசேஷித்த இனத்தை (மோசே மற்றும் யோசுவாவின் நாட்களில்) படைத்தல், அந்த இனத்தை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்தல்*

(எலியா மற்றும் எலிசாவின் நாட்களில்), தேவனுடைய புதிய மக்களினத்தை (கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில்) படைத்தல்.தேவன் தம்மைப் பின்பற்றியவர்கள் மேல் அளவற்ற விதத்தில் அற்புத வரங்களைப் பொழிந்த போதெல்லாம், பேயும் அவனைப் பின்பற்றினவர்களும் அளவான அற்புதச் செயல்களைக் கொண்டிருக்க மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். (இதற்குப் பழைய ஏற்பாட்டின் ஒரு எடுத்துக்காட்டைப் பார்க்க வேண்டுமென்றால், மோசே மற்றும் பார்வோனின் மந்திரவாதிகள் ஆகியோரின் வரலாற்றைக் காணவும் [யாத். 7:10-12, 20, 22; 8:6, 7, 17-19].) விசேஷ சம்பவங்கள் முடிந்தபோது, அற்புதங்கள் செய்யும் இவ்வல்லமையும் ஒழிந்து போயிற்று - தேவனைப் பின்பற்று பவர்களுக்கு மட்டுமல்ல, பேய்க்கும் அவனுடன் வேலை செய்பவர்களுக்கும் கூட இவ்வல்லமை இல்லாமல் போயிற்று.

புதிய ஏற்பாட்டைத் தொடர்ந்து நாம் படிக்கையில், சாத்தான் மற்றும் அவனது ஆதிக்கத்திற்கெதிராகத் தொடர்ந்து நாம் எச்சரிக்கப்பட்டாலும், ஒருவருடைய சுய விருப்பத்திற்கெதிராக அவர் சாத்தானால் அல்லது பிசாசுகளினால் பிடிக்கப்படுவது பற்றி குறைவாகவே நாம் படிக்கின்றோம். கிறிஸ்தவர்களுக்கு எழுதப் பட்ட நிருபங்களில் பிசாசு பிடித்தவர்கள் என்று எவ்விடத்திலும் எழுதப்படவில்லை- மற்றும் யாக்கோபு கூட, “பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்” என்றுதான் எழுதினார் (யாக். 4:7). ஆனாலும் இதற்கு, பேயும் அவனது பிசாசுகளும் செயல்படுவதில்லை என்று பொருளல்ல. பிசாசுகள் ஒருவரைப் பிடித்து அவரது விருப்பத்திற்கு மாறாகச் செயல்பட வைப்பதில்லை என்றும் பொருள்படாது. பேய் அல்லது அவனது பிசாசுகள் எனது வாழ்க்கையிலோ அல்லது உங்கள் வாழ்க்கையிலோ ஏதேனும் ஆதிக்கம் செய்கின்றன என்றால், நாம் அவைகள் அவ்வாறு ஆதிக்கம் செய்ய அனுமதிக்கிறோம் என்றே பொருள் படும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் நடந்தது போல இன்றைய நாட்களில் பிசாசு பிடித்தல் என்பது நம்மிடையே இல்லை.

# நடபடிகள் நூலின் காலவரிசை அட்டவணை

*சபையின் தொடக்க நாட்களில் நடைபெற்ற சம்பவங்களின் தேதிகளைப் பொறுத்தமட்டில், அவைகள் நடைபெற்ற நாட்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நமக்கு மிகக் குறைந்த அளவே தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளோம். பழைமைவாதக் கல்வியாளர்கள் கூட நடபடிகளின் முதல் பாகத்தில் உள்ளவைகள் நடந்த கால வரிசை அட்டவணை பற்றிக் கணிசமான அளவு மாறுபாடுள்ள கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஆயினும், நடபடிகளின் பிற்பகுதியில் உள்ள சம்பவங்கள் நடந்த நாட்களைக் குறிப்பிடுகையில் அநேக பழைமைவாதக் கல்வியாளர்கள் ஒருவருக்கொருவர் ஒரு சில ஆண்டுகளை வித்தியாசமாகத் தருகின்றனர், ஏனென்றால் நடபடிகளின் வரலாற்றுடன் அநேக உலகப் பிரகாரமான தேதிகள் இணைக்கப்பட முடியும்.*

1. *முதல் பெந்தெகொஸ்தே, 30.*[1]
2. *எருசலேமிலிருந்த சபை சிதறடிக்கப்படுதல், மற்றும் எருசலேமுக்கு வெளியே (சமாரியா, எத்தியோப்பிய மந்திரி) நற்செய்திப் பணிகள் தொடங்கப் பெறுதல் (33/34).*
3. *சவுலின் மனமாற்றம், 34/35.*
4. *தமஸ்குவிலிருந்து சவுல் தப்பித்தல், 37.*
5. *எருசலேமுக்கு வெளியே நற்செய்திப் பணி தொடர்ந்து நடைபெறுதல் (கொர்நேலியுவின் மனமாற்றம், அந்தியோகியாவில் சபை நிலைநாட்டப்படுதல், முதலியன), 34-43.*
6. *யாக்கோபின் மரணம், பேதுரு சிறைச்சாலையிலிருந்து அற்புதமாய் விடுதலையாகுதல் மற்றும் முதலாம் ஏரோது அக்கிரிப்பா இராஜாவின் மரணம், 44.*
7. *எருசலேமில் ஏற்பட்ட பஞ்சத்திற்கு நிவாரணம், 46.*

8. பவுலின் முதலாவது நற்செய்திப் பயணம், 46-48.
9. எருசலேமில் ஆலோசனைக் கூட்டம், 49.

*கலாத்தியருக்கு நிருபம் எழுதப்படுதல், 48/49??*

10. ரோமாபுரியிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படுதல், 49.
11. பவுலின் இரண்டாவது நற்செய்திப் பயணம், 49-52.

    1 தெசலோனிக்கேயர் நிருபம் கொரிந்துவிலிருந்து எழுதப்படுதல், 50.
    2 தெசலோனிக்கேயர் நிருபம் கொரிந்துவிலிருந்து எழுதப்படுதல், 50/51.

12. பவுலின் மூன்றாவது நற்செய்திப் பயணம் மற்றும் எருசலேமுக்குப் பயணம், 52-57.

    *(இந்தக் காலத்தில் கலாத்தியருக்கு நிருபம் எழுதப்பட்ட தாகச் சிலர் கூறுகின்றனர்.)*
    *1 கொரிந்தியர் நிருபம் எபேசுவிலிருந்து எழுதப்படுதல், 54/55.*
    *2 கொரிந்தியர் நிருபம் மக்கெதோனியாவிலிருந்து எழுதப்படுதல், 55/56.*
    *ரோமருக்கு நிருபம் கொரிந்துவிலிருந்து எழுதப்படுதல், 56.*

13. எருசலேமில் பவுல் கைது செய்யப்பட்டு எருசலேமிலும், செசரியாவிலும் சிறை வைக்கப்படுதல், 57-59.
14. பவுலின் ரோமாபுரிப் பயணம், 59-60.
15. பவுல் முதல்முறை ரோமாபுரியில் சிறை வைக்கப்படுதல், 60-62.

*எபேசியருக்கு நிருபம் ரோமாபுரியிலிருந்து எழுதப்படுதல்.*
*கொலோசெயருக்கு நிருபம் ரோமாபுரியிலிருந்து எழுதப்படுதல்.*
*பிலோமோனுக்கு நிருபம் ரோமாபுரியிலிருந்து எழுதப்படுதல்.*
*பிலிப்பியருக்கு நிருபம் ரோமாபுரியிலிருந்து எழுதப்படுதல்.*

## ——— இவ்விடத்தில் நடபடிகள் புத்தகம் ——— நிறைவு பெறுகின்றது

*16. சிறையிலிருந்து பவுல் விடுவிக்கப்படுதல், அவரின் மற்ற பயணங்கள் (ஸ்பெயின் மற்றும் பிற இடங்களுக்கு), 63-66 (?).*

*1 தீமோத்தேயு நிருபம் மக்கெதோனியாவிலிருந்து எழுதப்படுதல், 64/65 (?).*
*தீத்துவுக்கு நிருபம் மக்கெதோனியாவிலிருந்து எழுதப்படுதல், 65/66 (?).*

*17. இரண்டாம் முறை பவுல் கைது செய்யப்படுதல் மற்றும் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுதல், 66/67 (?).*

*2 தீமோத்தேயு நிருபம் ரோமாபுரியிலிருந்து எழுதப்படுதல், 66/67(?).*

---

குறிப்புகள்

[1]நடபடிகள் 2ன் நிகழ்ச்சிகள் கி.பி. 33 அல்லது 34ல் நடந்ததாக தொடக்க கால விரிவுரையாளர்கள் கருதினர். இயேசுவின் பிறப்புக் காலத்தைத் தேதியிடத் தொடங்கிய போது, மனிதர்கள் தவறான கணக்கீட்டுடன் தொடங்கினர், என்பது இப்போது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. யோசேப்பையும், மரியாளையும் பெத்லகேமுக்குச் செல்லும்படிச் செய்த ஜனத்தொகைக் கணக்கெடுப்புக்கு அநேக வருடங்கள் முற்பட்ட ஒரு குறிப்பை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் விளைவாக, நமது நாட்காட்டிகள் மூன்று அல்லது நான்கு வருடங்களை இழந்து போயுள்ளன. இயேசுவின் பிறப்புக்குப் பிறகு முப்பத்து மூன்று ஆண்டுகள் கழித்து முதலாவது பெந்தெகொஸ்தே நாள் வந்தது, ஆனால் மேற்கூறிய தவறு ஏற்பட்டதால், நமது நாட்காட்டிகளின்படி இந்தத் தேதி கி.பி. 30ல் வந்திருக்க வேண்டும்.

# லூக்கா பயன்படுத்தியிருக்கக் கூடிய சாத்தியக்கூறுள்ள மூலங்கள்

*லூக்கா 1:1-4 (இது லூக்காவின் சுவிசேஷத்திற்கு மட்டு மின்றி, நடபடிகளின் புத்தகத்திற்கும் ஒரு முன்னுரையாகப் பயன்படுகின்றது) லூக்கா, "ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்தார்" என்ற கருத்தைக் குறிப்பிடுகின் றது. லூக்கா சென்ற எல்லா இடங்களையும் அல்லது அவர் விசாரித்த எல்லா மனிதர்களையும் நாம் அறியவில்லை, ஆனால் நடபடிகள் புத்தகத்தில் லூக்கா பயன்படுத்தியிருக்கக்கூடிய சாத்தியக் கூறுள்ள மூலங்கள் சில இங்கு தரப்படுகின்றன:[1]*

*(1) சொந்த அனுபவம். லூக்கா பவுலுடன் அநேக இடங் களுக்குப் பயணம் செய்தார் (நடபடிகள் நூலில் "நாங்கள்" என்றுள்ள வேத வசனப்பகுதிகளைக் கவனிக்கவும்). இப் பயணங்களின் விரிவான விபரங்களைப் பார்க்கும்போது, லூக்கா இப்பயணங்களின்போது ஒரு நாட்குறிப்பை எழுதி வைத்திருக்கலாம் என்று யோசிக்கத் தோன்றுகிறது.*

*(2) பவுல். அவர்கள் பயணம் செய்தபோது, லூக்காவிடம், பவுல், சனதெரீன் சங்கத்தின் முன்பாக ஸ்தேவான் நின்றபோது என்ன நடந்தது என்பதைப் பகிர்ந்து கொண்டிருக்கலாம் (இ.வ. அப். 7:58; 8:1), அத்துடன் பவுல் தமது சொந்த மனமாற்றம், தொடக்க கால முயற்சிகள் மற்றும் லூக்கா, பவுலின் குழுவினரு டன் பயணத்தில் சேருமுன் நடந்த சம்பவங்கள் ஆகியவை பற்றியும் அவர் லூக்காவிடம் பகிர்ந்து கொண்டிருக்கலாம். மேலும் பவுல் கர்த்தரிடத்திலிருந்து விசேஷித்த வெளிப்படுத்து தல்களைப் பெற்றுக்கொண்டிருந்தார் (2 கொரி. 12:1, 7) இதில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும் உள்ளடங்கியிருந்தது (1 கொரி. 11:23-25).*

*(3) எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களின் கட்டளைகள்.*

*இந்தக் கட்டளைகள் எழுதப்பட்டு, சீரியாவின் அந்தியோகியா வுக்கு அனுப்பப்பட்டன (அப். 15:22-29; 21:25ஐயும் காணவும்). இவைகள் அந்தியோகியாவில் பத்திரமாக வைக்கப்பட்டிருந் திருக்கலாம். பாரம்பரியத்தின்படி, லூக்கா அந்தியோகியாவைச் சேர்ந்தவர் என்பதைக் கவனிக்கவும்.*

*(4) மனாயீன் (அப். 13:1). அந்தியோகியாவின் கிறிஸ்தவ ராகிய மனாயீன், "காற்பங்கு தேசாதிபதியாகிய எரோதுடனே கூட வளர்க்கப்பட்டவர்" ஆவார். இவர் ஏரோதின் குடும்பத் தைப்பற்றிப் பவுலுக்கு அதிகமாக கூறியிருக்கலாம்.*

*(5) சுவிசேஷகனாகிய பிலிப்பு. லூக்கா செசரியாவில் இருந்தபோது, பிலிப்புவின் வீட்டிலே அவர் தங்கியிருந்தார் (அப். 21:8). அப்பொழுது அவர், ஏழு பேரின் நியமனம்பற்றியும் (அப். 6:1-6), சமாரியர்கள் மற்றும் எத்தியோப்பிய மந்திரி ஆகியோரின் மனமாற்றம்பற்றியும் (அப். 8) அறிந்து கொண்டிருந்திருக்கலாம்.*

*(6) சீப்புரு தீவானாகிய மினாசோன். லூக்கா, சீப்புரு தீவானாகிய மினோசானுடன் தங்கியிருந்தார் (அப். 21:16). அப்பொழுது அவர், மினாசோனிடமிருந்து, சீப்புரு தீவில் சபை நிறுவப்பட்ட விபரங்களைப் பெற்றிருக்கலாம் (அப். 13:4-12).*

*(7) எருசலேமிலிருந்த முன்னோடிகள். லூக்கா எருசலேமில் இருந்தபோது, (அப். 21:17), கர்த்தருடைய சகோதரரான யாக்கோபு மற்றும் சபை ஆரம்பத்திலிருந்து உள்ள சகோதரர் களைச் சந்திக்க அவருக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன. ஒருவேளை அப்போஸ்தலர்களில் சிலர் அங்கு இன்னமும் இருந்திருக்கலாம். ஒருவேளை இயேசுவின் தாயாகிய மரியாளும் அங்கு இருந்திருக்கலாம்.[2] சபையின் தொடக்க நாட்களைப்பற்றி மட்டுமின்றி, எருசலேமில் கூடிய ஆலோ சனைக் கூட்டம் (அப். 15) பற்றியும் லூக்கா அறிந்திருக்க முடியும்.*

*(8) ஆதியிலிருந்த சபையின் மற்ற முன்னோடிகள். பவுலின் அநேக நிருபங்களின் முடிவுரைகளில், அவருடன் லூக்காவும், சீலா, தீமோத்தேயு மற்றும் சிலர் இருந்ததைக் குறிப்பிடுகின்றது. இந்த ஆதி முன்னோடிகளிடம் இருந்து லூக்கா, சபையைப் பற்றி அறிந்திருக்கலாம்.*

*(9) எருசலேம் போன்ற இடங்களில் இருந்த சபையைப் பற்றிய வாய்மொழியான அல்லது எழுதப்பட்ட வரலாறுகள்.*

ஒரு சபைக்கு நேரிட்ட நிகழ்ச்சிகள் மற்ற உள்ளூர் சபைகளின் ஆர்வத்தையும், அக்கறையையும் தூண்டுவதாக இருந்தன. (பவுல் தமது நிருபங்களில், தாம் எழுதும் குறிப்பிட்ட சபையின் பல விபரங்களை அவர் இருந்த இடத்தில் உள்ள சபையார் அறிந்திருந்ததாக அடிக்கடி குறிப்பிட்டார்.) இந்த விபரங்கள் முக்கியமானவைகளாதலால், இவைகள் நிச்சயமாகவே பதிவு செய்யப்பட்டு வைத்திருக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட பட்டியலானது லூக்காவினால் பயன்படுத்தப் பட்டிருக்கக்கூடிய சாத்தியக் கூறுள்ள சில மூலங்களைத் தருகிறது. ஆயினும் மிகவும் முக்கியமான (இன்றியமையாத ஒரே ஒரு) மூலம் பரிசுத்த ஆவியானவரேயாவார்.

---

குறிப்புகள்

[1]புரூஸ் M. மெட்ஜ்ஹெர் என்பவரின், புதிய ஏற்பாடு: இதன் பின்னணி, வளர்ச்சி மற்றும் பொருளடக்கம் (நியூயார்க்: அபிங்டன் அச்சகம், 1965) என்ற நூலிலிருந்து தழுவப்பட்டதாகும். [2]ஒரு தொடக்க காலப் பாரம்பரியத்தின்படி, யோவான் தன்னுடன் மரியாளை எபேசுவுக்கு அழைத்துச் சென்றதாகவும், மரியாள் அங்கு மரணமடைந்ததாகவும் கூறப்படுகிறது. இது உண்மையாக இருப்பினும், லூக்கா எருசலேமுக்குச் சென்று வந்த பின்புதான் இச்சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும்.